# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.8 (L.W.6)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.Jeevarathinam |
| Father Name | : | |
| Occupation | : | |
| Taluk | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.01.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.15 p.m**

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 21.03.2006 அன்று நடைபெற்றது. நான் ரெய்டுக்கு போக யார் என்னை அழைத்தார்கள் யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் சரவணன், வேலூர் அவர்கள் தெரிவித்தார். எழுத்து மூலமாக எந்த அழைப்பும் கொடுக்கவில்லை. நாங்கள் முதலில் வேலூர் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திற்கு சென்றேன். நாங்கள் RSI சீனிவாசன் என்பவருடன் நாங்கள் 10 பேர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் சென்றோம். அந்த 10 பேர் யார் என்றால் சிவாஜி. தனஞ்செழியன், சத்திய நாராயணன், குகன், ராஜமூர்த்தி, சுரேஷ்பாபு மற்றும் மற்ற காவலர்கள் சென்றோம். நாங்கள் 10 பேரும் அரசு வாகனம் TN 23 G 0394 eicher என்ற வாகனத்தில் தான் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் சென்றோம். நாங்கள் சுமார் மாலை 04.00 மணிக்கு சென்றோம். 03.30 மணிக்கு கிளம்பி போனோம்.

அங்கிருந்து நாங்கள் அனைவரும் அதே வாகனத்தில் காவல் துணை கண்காணிப்பாளருடன் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு செல்லும் போது மணி சுமார் மாலை 04.30 மணி இருக்கும். அங்கு 15 நிமிடங்கள்

இருந்தோம். அதன் பிறகு 04.45 மணிக்கு கிளம்பி சிவநாதபுரம் கையிலாய மலைக்கு சென்றோம். நாங்கள் போன பகுதி வீடுகள் உள்ளது மற்றும் மக்கள் வசிக்கும் இடம் என்றால் சரிதான். நாங்கள் காவல் துணை கண்காணிப்பாளர், உதவி காவல் ஆய்வாளர் புகழ், ஹரிதாஸ் அனைவரும் அதே வாகனத்தில் கையிலாய மலை சென்றடைந்தோம். அங்கிருந்து பார்த்தால் மலை பகுதியில் ஆள் நடமாட்டம் தெரிந்ததா என்றால் தெரியவில்லை.

நாங்கள் கையிலாய மலைக்கு சுமார் மாலை 06.00 மணிக்கு சென்றோம். மலை பகுதிக்கு மேலே வாகனங்கள் செல்ல வழி இல்லை. மலை அடிவாரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு நாங்கள் அனைவரும் நடந்து தான்சென்றோம். அந்த பாதை மலை பாதை என்பதால் கல்லும் முள்ளும் நிறைந்திருந்தது. நாங்கள் சுமார் 5 நிமிடத்தில் நடந்து சென்றோம். சுமார் 100,150 அடி இருக்கும். நாங்கள் அனைவரும் சீருடையில் இருந்தோமா என்றால் அனைவருமே சீருடையில் தான் சென்றோம்.

அந்த மலையில் என்ன பார்த்தேன் என்றால் சுமார் 4 பேர் சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் குடிப்பதற்காக இருந்தார்கள் மொத்தம் 8 பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் எந்த உடையில் இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது.

4 பேர்கள் எங்களை பார்த்தவுடன் ஓடிவிட்டார்கள். போலீசார்கள் சீருடையில் சென்றதால் எங்களை பார்த்து அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றால் சரிதான். காவல் துணை கண்காணிப்பாளர் சீனிவாசன் முதலில் போனார். அங்கிருந்த நபர்கள் எங்களுக்கு முன்ன பின்ன பரிட்ச்சயமானவர்களா என்றால் இல்லை. அங்கு யார் சாராயம் விற்றார்கள் யார் சாராயம் குடிக்க வந்தார்கள் என்றால் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். அங்கு சாராயம் விற்பதாக யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் தான் சொன்னார்.

அங்கு போகும்போது காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பொது

மக்களை யாராவது அந்த பகுதியில் சாராயம் விற்றார்களா என்று விசாரித்து அறிந்து கொள்ளவில்லை. நாங்கள் 2 துப்பாக்கியை பார்த்தோம். அந்த 2 துப்பாக்கிகள் நாட்டு துப்பாக்கிகள். ஒன்று பேரல் நீளமாகவும் ஒரு துப்பாக்கியின் பேரல் சற்று சிறியதாகவும் இருந்தது. அந்த அடையாளத்தை தவிர்த்து வேறு எந்த அடையாளங்களும் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த துப்பாக்கியை யார் எடுத்து வந்து கொடுத்தது என்றால் என்னுடன் வந்தவர்கள் எடுத்து வந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்தார்கள். அங்கு சுமார் 100 லிட்டர் சாராயம் பாக்கெட்டில் இருந்தது. அந்த சாராயத்தை எடுத்து வந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்து விட்டோம். பணம் ரூ.150 இருந்தது. என்ன தாள்கள் என்றால் 10,20,50 தாள்களாக இருந்தது. அந்த பணத்தையும் எடுத்துவந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிட்டார்கள்.

துப்பாக்கி, சாராய பாக்கெட்டு, பணம் ஆகியவற்றை எடுத்து கொண்டு பாகாயம் காவல் நிலையத்திற்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சென்றார்.காயம் பட்டவர்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது சுமார் மாலை 06.30, 06.45 மணி இருக்கும். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ரெய்டுக்கு போகும்போது மலை வாழ் மக்கள் ஆடு மேய்த்து கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களை தவறுதலாக காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சுட்டுவிட்டார் என்றும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் மேல் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

துப்பாக்கி, சாராய பாக்கெட்டுகள் ஆகியவை காவல் துணை கண்காணிப்பாளர் சொல்லி காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் அந்த இடத்திலிருந்து எந்த பொருளும் எடுத்தவரவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு தள்ளி வைக்கப்படுகிறது. நேரம் –12.35 p.m

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–நேரம்–02.50 p.m

வேலூர் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து எப்போது தகவல் வந்தது என்றால் 21.03.2006 அன்று மாலை சுமார் 03.00 மணிக்கு வந்தது. வான் வழி செய்தியாக தான் வந்தது. அதில் யார் யார் வர வேண்டும் என்று குறிப்பிட்டு கேட்டார்களா என்றால் இல்லை 10 பேர் வேண்டும் என்று தான் சொன்னார்கள். இந்த பணிக்கு என்னை பணித்தது யார் என்றால் ஆயுதப்படை Head quarters SI உத்தரவு படி எழுத்தர் எனக்கு பாஸ்போர்ட் கொடுத்து அனுப்பினார். ஆயுதப்படை அலுவலகத்திற்கும் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் அரை கிலோ மீட்டர் இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பாஸ்போர்ட் கொடுத்தாரா என்றால் இல்லை மொத்தமாக ஒரு பாஸ்போர்ட் கொடுத்து அனுப்பினார். இதுபோல் பாஸ்போர்ட் கொடுத்து அனுப்பினார்கள் என்று என்னை DCRB DSP விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன்.

தகவல் வந்ததிலிருந்து பாஸ்போர்ட் வாங்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் 10 நிமிடங்கள் ஆனது. ஆயுதப்படை இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் தெரியவில்லை, தோராயமாக 10 கிமீ. சம்பவ இடத்திற்கு அனைவரும் எதில் சென்றீர்கள் என்றால் விரிஞ்சிபுரம், அணைக்கட்டு, அதன் பிறகு சிவநாதபுரம் மலைக்கு போனோம். போலீஸ் வாகனத்தில் தான்போனோம்.

மேலே சொன்ன வழி தோராயமாக 30 கிமீ வழி என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சேர்ந்தோம் என்றால் மாலை 06.00 மணிக்கு. அங்கு விளக்கு எதுவும் எரியவில்லை. அங்கு எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் சுமார் 45 நிமிடங்கள் இருந்தோம். அப்போது இருட்டாக இருந்தது என்றால் இல்லை. மாலை 07.00 மணிக்கு இருட்டாக இருக்கும் என்றால் சரி.

யார் எங்கு இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று பார்க்க முடியாது

என்றால் சரியல்ல. நான் கொடுத்த 161 வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். சாட்சி சொல்வதற்கு முன் படித்து பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் படித்து பார்த்தேன் என்று சொன்னது எப்போது என்றால் விசாரணை செய்யப்பட்ட அன்றைக்கே படித்து பார்த்தேன். மறுநாள் படித்து பார்த்தேன். என்னிடம் புலன் விசாரணை போதே எனக்கு நகல் கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை, நான் தான் சொன்னேன், எனவே எனக்கு தெரியும்.

நான் கையிருப்பு சாட்சி என்றாலும் அந்த இடத்திற்கு நாங்கள் யாரும் போகவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் எனக்கு சம்பவ இடத்திற்கும் எங்கள் ஆயுதப்படை காவல் நிலையத்திற்கும் எத்தனை கிலோ மீட்டர் என்று கூட எனக்கு சொல்ல தெரியவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த 161 வாக்குமூலம். அந்த வாக்குமூலத்தில் எங்காவது முனிரத்தினம் கல் எடுத்து வீசினார் என்று இருக்கிறதா என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் இல்லை. முதல் விசாரணையில் கல் எடுத்து வீசியதாக வாக்குமூலத்தில் கூறாமல் புதியதாக தற்போது நீதிமன்றத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் முனிரத்திரனத்தை எப்போதும் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. முனிரத்தினத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 03.10 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.01.08 19:14:50 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்